# வாசிகசாலை ஆண்டறிக்கை 2023

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | வாசிகசாலை செயற்றிட்டம் |
| செயற்றிட்ட எண் | NF/GP/2020/0008 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்ட காலம் | ஒரு வருடம் |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலகம் நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | நடுகுழுமம் |
| பாதீடு | **324,000** ரூபா |

**1.** செயற்றிட்ட அறிமுகம்

நூலக நிறுவனமானது ஆவணப்படுத்தல் செயற்றிட்டத்தின் ஓர் பகுதியாக பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் ஆவணப்படுத்தலை 2005 ஆம் ஆண்டு முதல் மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் அதன் தொடர்ச்சியான செயற்பாடாக தமிழ் பேசும் சமூகங்களில் இருந்து சமகாலத்தில் வெளிவந்து கொண்டிருக்கின்ற பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளை குறிப்பிட்ட கால இடைவெளியில் வெளியீட்டாளர்களுக்கு விற்பனையினை பாதிக்காத முறையில் அவற்றை எண்ணிமப்படுத்தி அல்லது எண்ணிம கோப்புக்களை (PDF) சேகரித்து அவற்றை இலவசமாக திறந்த அணுக்கத்திற்கு கையளிக்கும் செயற்பாடே வாசிகசாலை செயற்றிட்டம் ஆகும்.
இச் செயற்றிட்டமானது நடு இலக்கிய சஞ்சிகையின் உதவியுடன் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்பட்டு வருகிறது.

**2.** செயற்றிட்ட நோக்கம்

2005 முதல் இன்று வரையான காலங்களில் நூலக நிறுவனம் பத்திரிகைகளை ஆவணப்படுத்தலை மேற்கொண்டு வருகிறது. இதன் அடிப்படையில் ஈழத்தின் தமிழ் பேசும் சமூகங்களில் இருந்து வெளிவந்த ஆரம்ப கால பத்திரிகைகள் ஆவணப்படுத்தப்பட்டன. இதன் தொடர்ச்சியாக நாளாந்தம் தமிழ் பேசும் சமூகங்களில் இருந்து வெளிவருகின்ற பத்திரிகைகளை ஆவணப்படுத்தல் என்பது முக்கிய செயற்பாடாகின்றது. அவ்வடிப்படையில் நாளாந்தம் பத்திரிகைகளை சேகரித்து ஆவணப்படுத்தும் நோக்கில் இச் செயற்றிட்டம் முன்வைக்கப்படுகின்றது.
ஏற்கனவே பழைய பத்திரிகைகளை ஆவணப்படுத்தும் செயன்முறைகளிலே நூலகம் ஈடுபட்டு வந்திருப்பினும், இந்தச் செயற்றிட்டமானது பத்திரிகைகள் வெளிவந்து அடுத்தடுத்த நாட்களிலேயே அல்லது மிகவும் குறுகிய காலத்தினுள்ளேயே அவற்றினை மின்னேற்றி வாசகர்களின் பார்வைக்கு வைப்பது இந்தச் செயற்றிட்டத்தினது பிரத்தியேக அம்சமாகும்.
இணையவெளியிலே பத்திரிகைகளுக்கான வாசிகசாலை போன்ற ஒரு உணர்வினை ஏற்படுத்தக் கூடிய ஒரு அமைப்பினை உருவாக்குவது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

**3.** பின்னணி

மக்களை மிக அதிகளவில் சென்றடையும் எழுத்தாவணங்களில் பத்திரிகைகள் முக்கியம் பெறுகின்றன. மக்களின் சிந்தனையில் இவை முக்கிய செல்வாக்குச் செலுத்துகின்றன அல்லது செலுத்த முற்படுகின்றன. கடந்தகால சமூகத்தின் சமய, சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டுப் பரப்புக்களின் போக்கில் பத்திரிகைகளின் செல்வாக்கு குறைத்து மதிப்பிட முடியாதது. வரலாறு எழுதுதலில் முதல்நிலைத் தகவல் வளங்களான பத்திரிகைகள் உசாத்துணை அடிப்படையிலும் முக்கியமானவை ஆகும். இப்பின்னணியில் நாளாந்தம் வெளிவருகின்ற பத்திரிகைகளை சேகரித்து வைத்தல் என்பது அடுத்த தலைமுறைக்கான மிக முக்கிய ஆவணமாக்கல் முயற்சியாகும். அந்த அடிப்படையில் வாசிகசாலை செயற்றிட்டம் தமிழ் பேசும் சமூகங்களில் வரலாற்று இருப்பியலுக்கு மிக அவசியமானதாகும். இணையத்தின் ஊடாக ஒரு உயிர்ப்பான பத்திரிகை வாசிக்கும் கலாசாரத்தினை உருவாக்குவதற்கும் பேணுவதற்கும் இந்தச் செயற்றிட்டம் உதவியாக இருக்கும்.

**4.** வாசிகசாலை செயற்றிட்டங்கள்/ அடைவுகள்

2005 முதல் செயற்பட்டு வரும் நூலக நிறுவனமானது 2019 வரைக்குமான பத்திரிகை ஆவணப்படுத்தலில் 45,664 பத்திரிகைகளை சேகரித்து எண்ணிமப்படுத்தி சமூகத்தின் அனைத்து படிநிலைகளிலும் செயற்படுகின்ற ஆய்வாளர்களுக்கான உசாத்துணையாக இணையத்தில் அணுகத்தக்க வகையில் ஆவணப்படுத்தியுள்ளது.
2020 ஆம் ஆண்டு நடு சஞ்சிகையின் நிதியுதவியுடன் வாசிகசாலை செயற்றிட்டமானது செயற்பாட்டிற்கு வந்தது.
இச் செயற்றிட்டத்தினூடாக 2023 ஆண்டு வரை அடையப்பட்ட அடைவுகளை கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது.

**2020** மற்றும் **2022** வரைக்குமான அடைவுகள்

| பத்திரிகைகள் | அடைவு | சஞ்சிகைகள் | அடைவு | பிறநாட்டு சஞ்சிகைகள் | அடைவு |
|---|---|---|---|---|---|
| உதயன் | 982 | ஞானம் | 44 | காலம் | 05 |
| வலம்புரி | 987 | ஜீவநதி | 54 | உள்ளான மனிதன் | 31 |
| காலைக்கதிர் | 1923 | நிமிர்வு | 24 | தாய்வீடு | 34 |
| தமிழ் Mirror | 451 | தென்றல் | 06 | காற்றுவெளி | 02 |
| ஈழநாடு | 800 | அருள் ஒளி | 21 | கலசம் | 06 |
| பாதுகாவலன் | 24 | அமுத நதி | 0 | சிவத்தமிழ் | 07 |
| மீள்பார்வை | 0 | வலு | 08 | மண் | 11 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | 279 | படிகள் | 0 | ஆக்காட்டி | 06 |
| செம்மண் | 84 | சிவபூமி | 01 | அகரம் | 14 |
| சுபீட்சம் | 350 | ஞானச்சுடர் | 24 | | |
| தென்னாடு | 28 | அனல் | 67 | | |
| கல்முனை நெற் பரிமாணம் | 23 | துமி | 51 | | |
| தீம்புனல் | 74 | குருஷேத்திரம் | 09 | | |
| News Plus | 20 | குருதீபம் | 42 | | |
| தினகரன் | 75 | வகவம் | 0 | | |
| இது நம் தேசம் | 5 | எழுநா | 01 | | |
| மெட்ரோ லீடர் | 0 | தமிழர் பொருண்மியம் | 15 | | |
| தேசியம் | 0 | | | | |

**2023 ஆண்டிற்கான அடைவுகள்**

| பத்திரிகைகள் | அடைவு | சஞ்சிகைகள் | அடைவு | பிறநாட்டு சஞ்சிகைகள் | அடைவு |
|---|---|---|---|---|---|
| உதயன் | 365 | ஞானம் | 10 | காலம் | 01 |
| வலம்புரி | 365 | ஜீவநதி | 16 | உள்ளான மனிதன் | 00 |
| காலைக்கதிர் | 364 | நிமிர்வு | 12 | தாய்வீடு | 12 |
| தமிழ் Mirror | 265 | தென்றல் | 02 | காற்றுவெளி | 00 |
| ஈழநாடு | 365 | அருள் ஒளி | 00 | கலசம் | 02 |
| பாதுகாவலன் | 08 | அமுத நதி | 00 | சிவத்தமிழ் | 01 |
| மீள்பார்வை | 08 | வலு | 00 | மண் | 13 |
| தமிழன் | 213 | படிகள் | 00 | ஆக்காட்டி | 00 |
| செம்மண் | 00 | சிவபூமி | 07 | அகரம் | 18 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுபீட்சம் | 52 | ஞானச்சுடர் | 12 | காலைக்கதிர் 2023.01.01 (மாலைப்பதிப்பு) | 27 |
| தென்னாடு | 12 | அனல் | 06 | | |
| கல்முனை நெற் பரிமாணம் | 00 | துமி | 12 | | |
| தீம்புனல் | 100 | குருஷேத்திரம் | 04 | | |
| News Plus | 00 | குருதீபம் | 10 | | |
| தினகரன் | 365 | வகவம் | 00 | | |
| இது நம் தேசம் | 02 | எழுநா | 12 | | |
| மெட்ரோ லீடர் | 09 | தமிழர் பொருண்மியம் | 51 | | |
| தேசியம் | 101 | | | | |

இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் வாசிகசாலைப் பகுப்பிலிருந்த அருள்ஒளி, அமுதநதி, கமத்தொழில் விளக்கம், சிவதொண்டன், நான், செம்மண், இந்து தமிழர் குரல் ஆகிய வெளியீடுகள் தொடர்ந்து வெளியிடப்படாததால் வாசிகசாலைப் பகுப்பிலிருந்து நீக்கப்பட்டது.

இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் ஒரு பத்திரிகையின் ஒரு குறித்த வெளியீடானது அதனது அடுத்த வெளியீடு வந்ததன் பின்னரே மின்னேற்றி வாசகர்களுக்காக விடப்படும். இதற்கான எழுத்து மூலமான அனுமதி உரிய பத்திரிகை நிறுவனங்களிடம் இருந்து பெறப்படும்.

5. செயற்பாடுகள்

- சமகாலத்தில் வெளியாகும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், இதழ்கள் பற்றிய பட்டியல் ஒன்றினைத் தயாரித்தல்
- நாளாந்தம் வெளியிடப்படுகின்ற பத்திரிகைகளை சேகரித்தல், சேகரிக்கப்பட்ட பத்திரிகைகளை எண்ணிமப்படுத்தல், அவற்றை இணையதளத்தில் பதிகை இடல், ஆவணங்களை மீள ஒப்படைத்தல்

6. சவால்களும் அதனை எதிர்கொள்ளும் பொறிமுறைகளும்

செயற்றிட்டம் நடைப்பெற்ற கால அடிப்படையில் எதிர்கொண்ட சாவல்களும் அதனை சமாளிப்பதற்கு பயன்படுத்திய பொறிமுறைகளும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- இலக்குகளை உரிய நேரத்தில் அடைய முடியாது போதல் : நூலக நிறுவனம் அடைவுகளை தொடர்ச்சியாக பேணுவதற்கான

பயிற்சிகளையும் உதவிகளையும் வழங்கியதுடன் இலக்குகள் தொடர்ச்சியாக பேணப்பட்டன.

- வாசிகசாலைக்கு பத்திரிகைகள் உரிய நேரத்தில் பெறமுடியாமை. முகவர்கள் உரிய நேரத்தில் பத்திரிகை கையளிக்காது போகின்ற சந்தர்ப்பத்தில் அதனை வேகமாக பெற்று எண்ணிமப்படுத்தல் செயற்பாட்டிற்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.
- Online ஊடாக சஞ்சிகைகளை பெறுவதில் ஏற்படும் தாமதம் : தொடர்ச்சியான தொடர்பாடலூடாக விரைவாக பெறுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படும்.

பின்னிணைப்பு
[வாசிகசாலை]